**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆணி மாதம் 01ம் நாள்**
**I.A.No.02/2026**
**in**
**Original Suit No.751/2022**
**(CNR.No.TNDG19-003089-2022)**

1. கலியுகவரதன் (எ) வரதராஜ்

2. பாரதி ... மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள்

/எதிர்/

1. இளவர். அதிசயா (இறப்பு)

2. இளவர்.அபூர்வா

(மேற்படி இளவர் வாதிகள் தங்கள் பாட்டியும் அடுத்த சிநேகிதியுமான லேட்.துரைச்சாமி மனைவி ஈஸ்வரி)

... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இந்த மனுவானது கடந்த 10.07.2026ம் தாக்கல் செய்யப்பட்டு, அன்றே கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த 17.08.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.அனிருத் R.கர்கா அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிர்மனுஉரை, வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்துவந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

**1.** இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் கடந்த 07.07.2026ம் தேதி முடித்து வைக்கப்பட்ட சாட்சியத்தை மறுதிறப்பு செய்து 1ம் மனுதாரர்/3ம் பிரதிவாதியை பி.வா.சா.2 ஆக விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு, பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம் :**

இந்த மனுவில் 1ம் மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி. தாவா அசல் வழக்கு 1, 2 பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியை விசாரிக்க கடந்த 07.07.2026ம்தேதி வாய்தா போடப்பட்டிருந்த அன்று பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்கொண்டு சாட்சியை விசாரிக்கவில்லை என்று பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை முடிப்பதாக குறிப்பு செய்ததால் மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் இல்லை என்று முடித்து அசல் வழக்கு இன்று விவாதத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அசல் வழக்கில் முதலில் முத்துலட்சுமி 1–ம் பிரதிவாதியாகவும், அருண்குமார் 2–ம் பிரதிவாதியாகவும், இந்த மனுவின் 1ம் மனுதாரர் 3–ம் பிரதிவாதியாகவும் மூவர் மட்டும் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டும், அசல் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பிறகு 1ம்மனுதாரரின் மகளான இளவர் 1–ம் வாதி மோட்டார் வாகன விபத்தில் காலமானதால் அவருக்கு 1ம் மனுதாரரும், அவரது மனைவியும் சட்ட வாரிசுகளாக சேர்க்கப்பட்டதால் 1ம் மனுதாரரின் மனைவி 4–ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார். முதலில் வழக்கறிஞர். K.பாலசுப்பிமணியம் அவர்கள் பிரதிவாதிகள் தரப்பு வழக்குரைஞராக இருந்து எதிர்வழக்குரை தாக்கல் செய்து, அவர் வழக்கறிஞர் பணியில் இருந்து ஓய்வு பெற்றதால் பின்னிட்டு வழக்கறிஞர் திரு.அனிருத் R. கர்கா அவர்களை பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞராக நியமித்து ஒரு கூடுதல் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, அதில் பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக மொத்தம் 14 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.1ஆக விசாரிக்கப்பட்ட 2–ம் பிரதிவாதி அவருடைய குறுக்கு விசாரணையில் 1ம் மனுதாரர் தரப்பு 3, 4, 5, 10, 11 ஆவணங்களை குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டதால் அவை முறையே Ex.A16, 15, 17, 18, 19 ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளன. மற்ற ஆவணங்களை மறுத்ததால் குறியீடு செய்யப்படவில்லை. மேலும் 1ம் வாதி காலமான பிறகு அவருடைய சட்ட வாரிசுகளாக சேர்க்கப்பட்ட 1ம் மனுதாரரும், 2ம் மனுதாரரும், 4ம் பிரதிவாதியும்

கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். கடந்த 07.07.2026ம் தேதி மனுதாரர்கள் தரப்பில் பிரதிநிதியாக இருந்த வழக்குரைஞர் புரிதல் தவறுதல் காரணமாக மனுதாரர்கள் தரப்பில் No Oral Evidence என்று கூறியுள்ளார். 1ம் மனுதாரரை பி.வா.சா.2 ஆக விசாரணை செய்து மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களை குறியீடு செய்யாவிட்டால் அசல் வழக்கில் சரியான தீர்ப்பு வழங்க முடியாமல் போய்விடும், எனவே, மனுதாரர்கள் தரப்பில் கடந் 07.07.2026–ம் தேதி முடிக்கப்பட்ட சாட்சியத்தை re–open செய்து 1ம் மனுதாரரை பி.வா.சா.2 ஆக விசாரணை செய்ய உத்திரவாக வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**:

மனுதாரர்களின் மனு உண்மையல்ல. மனுதாரர்களுக்கு மனுவில் கேட்டுள்ள பரிகாரங்கள் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தங்கள் பிரமாணவாக்குமூலத்தில், நீதிமன்றம் மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் உள்ளதா என்று கேட்ட போது மனுதாரர்கள் தரப்பை Represent செய்த வழக்கறிஞர் தவறாக புரிதல் கொண்டு மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் இல்லை என்று கூறியதால் நீதிமன்றம் மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் இல்லை என முடித்து விட்டதாக குறிப்பிட்டுள்ளது பொய்யானதாகும். வாய்தா அன்று மனுதாரர்கள் தரப்பில் Represent செய்த வழக்கறிஞரின் பெயர் பற்றிய விபரங்கள் எதையும் மனுதாரர்கள் தங்கள் பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. மேலும் மனுதாரர்கள் தரப்பில் Represent செய்த வழக்கறிஞர் அவர்கள் சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் வழக்காடிவரும் மூத்த வழக்கறிஞர் ஆவார். அவர் மனுதாரர்களின் அறிவுறுத்திலின் பேரிலேயே மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை என Endorsement செய்து கொடுத்திருப்பார். ஏற்கனவே மனுதாரர்களும், வாதிகளும் கூட்டாக இருந்து கொண்டு அசல் வழக்கை தாக்கல் செய்து மனுதாரர்களுக்கு வீண் அலைச்சலையும், மனஉளைச்சலையும் ஏற்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு சாதகமான சூழ்நிலை நிலவி வருவதால் மனுதாரர்களும், வாதிகளும் அசல் வழக்கின் போக்கை திசைதிருப்ப வேண்டும் என்ற தீய

நோக்கத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். இம்மனு அனுமைதிக்கப்பட்டால் எதிர்மனுதாரர்களுக்கு பாதிப்பு ஏற்படும். எனவே தான் மனுதாரர்கள் மேற்படி மனுவில் மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் சுத்தமான செய்யவில்லை. கரங்களுடன் இம்மனுவை தாக்கல் தாக்கல் செய்யவில்லை. எனவே, மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவை அனுமதிக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பதே பிரச்சனையாகும்.

**5. பிரச்சனைக்கான தீர்வு :**

**5.1.** அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்து பார்க்கும் போது, அசல் வழக்கானது விளம்புகை மற்றும் பாகப்பிரிவினை பரிகாரம் தாக்கல் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதிகள் தரப்பில் 1, 2 வாதிகளின் காப்பாளரான ஈஸ்வரி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்களும், பி.வா.சா.1 என்பவரின் குறுக்கு விசாரணையின்போது வா.சா.ஆ.15 முதல் வா.சா.ஆ.19 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்தும், ஒட்டன்சத்திரம் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் கிளை மேலாளர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு சாட்சிகளை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, 3ம் பிரதிவாதி முன்னிலையாகாத நிலையில், 3ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டு, வாதிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.வா.சா.1 என்பவரை வாதிகள் தரப்பில் பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, தொடர் குறுக்கு

விசாரணைக்காக வழக்கு வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், அசல் வழக்கில் 1ம் வாதி இளவர் அதிசயா என்பவர் இறந்துவிட்டதால் அவரது தாயாரான பாரதி என்பவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டி இ.ம.எண்.01/2025 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் 4ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார். இ.ம.எண்.383/2023 என்ற எண்ணில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் No oral evidence என சொன்னதன் அடிப்படையில் 3, 4 பிரதிவாதிகள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு வாதுரைக்காக வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் முடித்து வைக்கப்பட்ட சாட்சியத்தை மீண்டும் மறுதிறப்பு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.2.** இந்த மனுவின் அனைத்து சூழ்நிலைகளையும் ஒருங்கியல்பாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, இந்த அசல் வழக்கானது வாதிகளால், பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் பாகப்பிரிவினை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், வழக்கிலுள்ள இருதரப்பினர்களும் தங்களது நிலைப்பாட்டை எடுத்துக்கூற போதிய வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாகும். 1ம் மனுதாரரை பி.வா.சா.2 ஆக விசாரணை செய்து மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களை குறியீடு செய்யாவிட்டால் அசல் வழக்கில் சரியான தீர்ப்பு வழங்க முடியாமல் போய்விடும் என்று மனுதாரர்கள் தரப்பில் தெரிவித்துள்ளதை கருத்தில் கொண்டும், அசல் வழக்கில் முழுமையான தீர்வு காண மனுதாரர்கள் தரப்பிற்கு மற்றொரு வாய்ப்பு வழங்குவதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மனுதாரர்கள் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால், ஒரு கணிசமான செலவு தொகையினை மனுதாரர்கள் இம்மனுவின் எதிர்மனுதாரர்களுக்கு வழங்கும்பட்சத்தில், 07.07.2026ம் தேதி முடித்து வைக்கப்பட்ட 3, 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை மறுதிறப்பு செய்ய

இம்மனுவை அனுமதிப்பதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**6. முடிவில்,**

**இம்மனுவின் மனுதாரர் மனுவின் செலவு தொகையாக ரூ.1000/– தொகையை எதிர்மனுதாரர்களுக்கு எதிர்வரும் 27.08.2026ம் தேதிக்குள் வழங்க வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 28.08.2026.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 18ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.08.18 19:27:19 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**

**மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் : இல்லை.**
**எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் : இல்லை**

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.08.18 19:27:23 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆணி மாதம் 01ம் நாள்**
**I.A.No.02/2026**
**in**
**Original Suit No.751/2022**
**(CNR.No.TNDG19-003089-2022)**

1. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், K.கீரனூர் கிராமம், இடையன்வலசு, இலந்தமடைத் தோட்டம் (இலந்தமரத்தோட்டம்) என்ற முகவரியில் வசித்து வரும் லேட்.துரைச்சாமிக் கவுண்டர் மகன் இந்து வயது சுமார் 37 உள்ள கலியுகவரதன் (எ) வரதராஜ்

2. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், K.கீரனூர் கிராமம், இடையன்வலசு, இலந்தமடைத் தோட்டம் (இலந்தமரத்தோட்டம்) என்ற முகவரியில் வசித்து வரும் 3ம் பிரதிவாதி கலியுகவரதன் (எ) வரதராஜ் மனைவி இந்து வயது சுமார் 33 உள்ள பாரதி ... மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள்

/எதிர்/

1. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், K.கீரனூர் கிராமம், இடையன்வலசு, இலந்தமடைத் தோட்டம் என்ற முகவரியில் வசித்து வரும் 3ம் பிரதிவாதி கலியுகவரதன் (எ) வரதராஜ் இளவர் மகள் இந்து வயது சுமார் 7 உள்ள இளவர். அதிசயா (இறப்பு)

2. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், K.கீரனூர் கிராமம், இடையன்வலசு, இலந்தமடைத் தோட்டம் என்ற முகவரியில் வசித்து வரும் 3ம் பிரதிவாதி கலியுகவரதன் (எ) வரதராஜ் இளவர் மகள் இந்து வயது சுமார் 3 உள்ள இளவர்.அபூர்வா

(மேற்படி இளவர் வாதிகள் தங்கள் பாட்டியும் அடுத்த சிநேகிதியுமான லேட்.துரைச்சாமி மனைவி ஈஸ்வரி)

... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் கடந்த 07.07.2026ம் தேதி முடித்து வைக்கப்பட்ட சாட்சியத்தை மறுதிறப்பு செய்து 1ம் மனுதாரர்/3ம் பிரதிவாதியை பி.வா.சா.2 ஆக விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் – 10.07.2026**

இந்த மனுவானது கடந்த 10.07.2026ம் தாக்கல் செய்யப்பட்டு, அன்றே கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த 17.08.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.அனிருத் R.கர்கா அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிர்மனுஉரை, வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்துவந்து, இன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் உத்தரவாணையை வழங்குகின்றது.

**உத்தரவாணை**

இம்மனுவின் மனுதாரர் மனுவின் செலவு தொகையாக ரூ.1000/– தொகையை எதிர்மனுதாரர்களுக்கு எதிர்வரும் 27.08.2026ம் தேதிக்குள் வழங்க வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 28.08.2026.

**சொத்து விபரம் – இல்லை**.

## செலவுபட்டியல்

| | மனுதாரர்/1ம் பிரதிவாதி ரூ.பை | எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் ரூ.பை |
|---|---|---|
| மனுவின் மீதான ஸ்டாம்ப் | ரூ.20.00 | --- |
| வக்காலத்திற்கான ஸ்டாம்ப் | ரூ.10.00 | --- |
| | செலவுபட்டியல் தாக்கல் இல்லை | |
| மொத்தம் | 30.00 | --- |

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ம் நாளாகிய இன்று என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.08.18 19:27:31 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**